**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 17.12.2024 |
| Case No. | : **O.S.1/2023** | Nationality | : Indian |
| Name | : பிரேமா | Religion | : |
| Father's/Husband's Name | : நாகராஜன் | Age | : 44 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>பி.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவர் அரசியல் கட்சியில் உள்ளாரா என்றால் இல்லை அவரது அண்ணன்தான் உள்ளார். எனது கணவரின் அண்ணன் பெயர் என்னவென்றால் சிங்கு செல்வராஜ் ஆகும். நான் தற்போது குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் என்னவென்றால் புல எண் 647/20 ஆகும். அந்த சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் கம்பகரேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானதாகும். வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை. வாதிகள் குடியிருக்கும் இடம் பட்டா இடமா என்றால் 350 மீட்டர் விஸ்தீரணமுள்ள இடம் மட்டும் பட்டா இடமாகும். அது என்ன பட்டா என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை.

2. எனது சொத்தை அளவீடு செய்ய வேண்டுமென்று நாங்கள் மனு கொடுத்துள்ளோம் என்றால் நாங்கள் யாருக்கு மனு கொடுத்தோம் என்று எனக்கு தெரியவில்லை. வாதிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை நடந்து வருகிறது என்றாலும் அதனால் நாங்கள் இரு தரப்பினரும் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றாலும் , வாதிகள்

நீதிமன்றத்திற்கு வந்துவிட்டதால் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. 11.12.2022 ம் தேதி வாதிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு முறையான நத்தம் பட்டா வழங்கப்பட்டு வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அப்புறம் எப்படி கோவிலில் அளந்து கொடுத்தார்கள்.

3. கோவிலில் எங்களுக்கு என்ன கொடுத்தார்கள் என்றால் NOC கொடுத்தார்கள் நாங்கள் கட்டிய பணத்திற்கு ரசீது கொடுத்தார்கள். கோவில் நிலத்திற்கும் வாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணம் அனைத்தும் செல்லக்கூடிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது கணவரும், கொழுந்தனார் சிங்கு செல்வராஜ் என்பவரும் சேர்ந்து வாதிகளிடம் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்கள் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.18 10:20:03 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.